## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் காரணமாக முகவராண்மையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, முகவராண்மையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது முகவராண்மையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

முகவராண்மையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் முகவராண்மையால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு முகவராண்மையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக முகவராண்மையின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாக என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள

ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் முகவராண்மையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க முகவராண்மை செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல், தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசதியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இற்கு முரணாக மோட்டார் வாகனங்களை விற்பனை செய்யும் இலாபமான ரூபா 8,619,377 தொகை மற்றும் முற்கொடுப்பனவுகளிலிருந்து உருவாகிய ரூபா 5,937,115 தொகையான காசுப்பாய்ச்சல் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட காசுப்பாய்ச்சலுக்கு பிழையாக செம்மையாக்கப்பட்டிருந்தது. அவ்வாறே நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து வெளிச்சென்ற காசுப்பாய்ச்சல்கள் முறையே ரூபா 19,791,500 மற்றும் ரூபா 2,463,876 தொகைகள் காசுப்பாய்ச்சல் கூற்றுக்கு செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை.<br>அத்துடன் நிலையான சொத்துக்களுக்காக முதலீடு செய்த பணம் ரூபா 22,207,418 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், ஆண்டிற்கான காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் மாற்றங்கள் பூச்சியப் பெறுமதியாக இருந்த போதிலும், ரூபா 34,686,128 ஆக பிழையாக சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. | இப்பிழைகளை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் அறிவுறுத்தல்களுக்கு முரணாக சொத்துக்களுக்கு ரூபா 2,279,180 அதிகரித்து பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. நியமத்தின் 92(இ) பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது விற்பனைக்காக இனங்காணப்பட்ட ஆனால் மீளாய்வாண்டின் இறுதிவரை விற்பனை செய்யப்படாத 07 மோட்டார் வாகனங்கள் தொடர்பாக நடைமுறைப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>நியமத்தின் 21 ஆம் பந்திக்கு முரணாக மீளாய்வாண்டின் போது மோட்டார் வாகனம் மற்றும் சமுத்ரிக்கா ஆராய்ச்சிப் படகினை திருத்தம் செய்வதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 11,885,455 மொத்த தொகை மூலதனமாக்கப்பட்டிருந்தது. நியமத்தின் 69 ஆம் பந்தியின் பிரகாரம் | இப்பிழையை எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் வணிகச் சொத்துக்கள் சம்பந்தமாக சொத்துக்களை கணக்கு வைத்தல் மற்றும் பெறுமானத்தேய்வு செய்தல் இடம்பெறுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஒரு சொத்தை பெறுமானத்தேய்வு செய்தலானது அதன் எதிர்பார்த்த பயன்பாட்டு நிலைமைக்கு மாறியதன் பின்னர் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக மீன் வளர்ப்பு நிலையத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கை மீளாய்வாண்டின் இறுதி வரை முடிவுறுத்தப்படாதிருந்தும் ரூபா 19,791,499 தொகை கட்டிடக் கணக்கிற்கு மூலதனமாக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் முகவர் நிலையங்களால் 2006 சனவரியிலிருந்து 2015 ஒக்தோபர் வரையான ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பைச் செலுத்தும் போது வாழ்க்கைச் செலவுப் படிகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாததனால் செலுத்த வேண்டிய நிலுவைப் பங்களிப்பு பணத்தை செலுத்துவதற்காக வழங்கப்பட்ட ரூபா 39,930,000 திறைசேரி மானியங்கள் 2017 நவம்பர் 22 ஆந் திகதிய அமப/17/2/512/725/037 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அடுத்துவரும் 02 ஆண்டுகளின் போது நிறுவனத்தின் உழைப்புக்களிலிருந்து திரட்டு நிதியத்திற்கு மீளச்செலுத்த வேண்டிய போதிலும் நியமத்தின் 22 ஆம் பந்தியின் பிரகாரம் அதற்கான ஒதுக்கீடு செய்தலினை கணக்கீடு செய்தல் அல்லது நியமத்தின் 97 ஆம் பந்தியின் பிரகாரம் உரிய வெளிப்படுத்தல் செய்யப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்திற்கு வழங்கப்படுகின்ற மீண்டுவரும் நிதி ஏற்பாடு மற்றும் ஆண்டிற்கான இறைவரி வருமானம் ஆண்டிற்கான செலவுகளுக்கு மாத்திரமே போதுமானதாகும். எனவே மேலதிக செலவுகளை மேற்கொள்வதற்கு வருமானம் இல்லை. இந்த அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் இந்நிலைமையினையே கொண்டுள்ளன. இதனைத் தீர்த்து வைப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுப்பதாக பல்வேறு சந்தர்ப்பங்களில் தெரிவித்துள்ளது. எனவே செலுத்த வேண்டிய செலவாகச் சுட்டிக்காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மற்றும் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் உரிய மாற்றங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| ரூபா 6,470,099 தொகையான கணனி மென்பொருட்களை கட்புலனாகாச் சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் இனங்காண்பதற்காக கணக்கீட்டுக் கொள்கைகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் ஆண்டின் போது இக்கொள்கையினைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கட்புலனாகாச் சொத்துக்களுக்காக தேவையான கணக்கீட்டுக் கொள்கையைத் தயாரித்து அதற்கிணங்க உரிய வெளிப்படுத்தல்களைச் செய்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டின் போது மீள் மதிப்புச் செய்து மீளாய்வாண்டின் போது விற்பனை செய்யப்பட்ட 06 மோட்டார் வாகனங்களின் பெறுமதியை கணக்குகளிலிருந்து அகற்றும் போது அவற்றின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு முறையே ரூபா 4,367,100 மற்றும் ரூபா 2.269,813 குறைத்துக் கணக்குகளிலிருந்து அகற்றுதல் கணக்கிற்கு செம்மையாக்கியதன் காரணமாக மோட்டார் வாகனங்களை விற்பனை செய்யும் இலாபம் ரூபா 2,096,727 ஆல் அதிகரித்து நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்ததுடன் அந்த மோட்டார் வாகனங்களை மீள்மதிப்புச் செய்ததன் மூலம் இனங்காணப்பட்ட ரூபா 7,276,600 தொகையான மீள்மதிப்பு ஒதுக்க மோட்டார் வாகனங்களைவ விற்றதன் பின்னர் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். 2019 ஆம் ஆண்டிற்காக தேவையான கணக்குகளைத் தயாரிக்கும் போது இத்தவறை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களை விற்கும் போது சொத்துக்களை விற்ற திகதியில் சொத்துக்களின் மீள்மதிப்பு பெறுமதி மற்றும் பெறுமானத்தேய்விற்கான ஒதுக்கம் சரியாக இனங்காணப்பட்டு சொத்துக்களை விற்பனை செய்வதிலான இலாபம் அல்லது நட்டத்தை சரியாக இனங்கண்டு சரியான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காட்டுதல் வேண்டும். |
| (ஆ) | முகவராண்மையின் கணக்கீட்டு கொள்கைகளின் மூலம் அரசாங்க மானிய கணக்குகளில் பதிவு செய்தல் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 20 இன் பிரகாரம் இடம்பெறுகின்றது என்பது முகவராண்மையின் கணக்கீட்டுக் கொள்கையில் காட்டப்பட்டிருந்தும் அமைச்சு மானியங்களின் கீழ் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6,090,164 பெறுமதியான மீன் தாங்கிகள் நிலையான சொத்துக்கள் மற்றும் அரசாங்க மானியமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். 2019 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது இத்தவறை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்க மானியத்தின் கீழ் கிடைக்கின்ற மூலதனச் சொத்துக்களை சரியாகக் கணக்கீடு செய்து தொடர்புபட்ட நிதிக்கூற்றுக்களை கணக்குகளுடன் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | முகவராண்மையால் பயன்படுத்தப்படுகின்ற பனாபிடிய மற்றும் கப்பரதொட விலுள்ள 4.441 ஹெக்டயர்களான இரண்டு காணிகளையும் மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டு வருவதற்கு 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். 2019 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது இத்தவறை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முகவராண்மைக்குச் சொந்தமான சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | முன்னைய ஆண்டுகளுக்கான தவறுகளை நிவர்த்தி செய்யும் போது 2017 ஆம் ஆண்டிற்காக செலவு செய்த ரூபா 4,810,943 தொகையான மோட்டார் வாகனங்களைத் திருத்தும் செய்யும் செலவுகளை மூலதனமாக்கும் தவறு நிவர்த்தி நெய்யப்பட்டிருந்தும் அதனுடன் தொடர்பாக இனங்காணப்பட்ட ரூபா 292,679 பெறுமானத்தேய்வு கணக்குகளில் செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். 2019 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது இத்தவறை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களை மூலதனமாக்கும் போது அதனுடன் தொடர்புபட்ட பெறுமானத்தேய்வினை யும் கணிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

**1.5.5 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | தொடர்புபட்ட அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| பாதுகாப்புச் சேவைக்காக செலுத்த வேண்டிய செலவுகள் | 1,951,387 | 5,904,346 | 3,952,959 | முகாமைத்துவம் கருத்துரைகள் தெரிவிக்கவில்லை. | பாதுகாப்புச் சேவைக்காக செலுத்த வேண்டிய மீதியை உரிய நிறுவனத்துடன் கலந்துரையாடி சரியான மீதியை நிதிக்கூற்றுக்களில் காட்டுதல் வேண்டும். |

**1.5.6 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | பொறிகளும் உபகரணங்களும் | 538,331 | ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் ஆரம்ப மீதிக்குரிய செம்மையாக்கல்களுக்கான அனைத்து நாட்குறிப்பு வவுச்சர்களும் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். 2019 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது இத்தவறை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து நாட்குறிப்பு பதிவுகளையும் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டு வரும் அட்டுறு செலவுகள் | 5,574,590 | இன்வொயிஸ் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்துதல் கடிதம் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். 2019 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது இத்தவறை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அட்டுறுச் செலவுகளின் பொறுப்பை உறுதிப்படுத்துவதற்கு உரிய எழுத்து மூலச் சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும். |
| (இ) | செயற்திட்ட கடன்பட்டோர் | 4,246,185 | மீதிகளை உறுதிப்படுத்துதல் கடிதம் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். 2019 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது இத்தவறை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்பட்டோர் மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய எழுத்துமூலச் சான்றுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். |

### 1.5.7 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான செயற்திட்ட கடன்கொடுத்தோர் மீதி ரூபா 46,826,574 ஆக இருந்ததுடன் அவற்றில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 17,902,236 ஆகும். | இப்பணம் ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்திலிருந்து கொடுப்பனவுகள் செய்யப்பட்டதன் பின்னர் சேமிக்கப்பட்டதாகும். மேலும், செயற்திட்டம் முடிவடைந்த உடன் அதனை வருமானமாகக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அடிக்கடி காணப்படுகின்ற கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்த்துவைப்பதற்கான பொறுப்புக்களை உறுதிப்படுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அட்டுறு செலவுகளிலிருந்து ரூபா 1,759,606 தொகை 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் ரூபா 5,574,593 தொகை 02 ஆண்டுகளுக்கும் 03 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகவும் தீர்த்து வைக்கப்படாது காணப்பட்டது. | செலுத்த வேண்டிய ரூபா 1,759,606 பணம் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் 2 - 3 ஆண்டுகள் காலத்துள் தீர்த்து வைக்கப்படாதுள்ள ரூபா 5,574,593 பணமானது காணப்படுகின்ற நிதி | அட்டுறு செலவுகளிலிருந்து மேலும் செலுத்த வேண்டியுள்ள பொறுப்புக்கள் தொடர்பாக சரியாகத் தேடிப் பார்த்து பொறுப்புக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | ஏற்பாட்டு நிலைமையின் கீழ் 2018 ஆம் ஆண்டிலிருந்து செலுத்தப்பட்டு வருகின்றது எனக் காட்டப்பட்டிருந்தது. | காணப்படுமாக இருந்தால் மாத்திரம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கொள்வனவு மற்றும் சேவை முற்பணமாக வழங்கப்பட்டுள்ள ரூபா 858,494 தொகை 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் ரூபா 272,160 தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | இம்மீதிகளை விரைவாகத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் உரிய செயற்பாடுகள் பூர்த்தியடைந்த உடன் முற்பணங்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

---

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 104 | 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 411,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட கணனி மென்பொருளை உள்ளடக்கிய ரூபா 52,000 கிரயமான ஒரு கணனி 2012 ஆம் ஆண்டின் போது காணாமல் போயிருந்தமை சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாக வழங்கப்பட்டுள்ள தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 395(அ) | நிதிப்பிரமாணம் 395(அ) இன் பிரகாரம் 03 வங்கி கணக்குகளுக்காக கணக்கிணக்க கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 03 வங்கிக் கணக்குகளுக்காக கணக்கிணக்க கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. இதற்கு காரணம் இக்கணக்கின் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்ற பணம் விடுவிப்பு மாத்திரமாகும். | நிதிப் பிரமாணம் 395(அ) இன் பிரகாரம் வங்கி கணக்கில் குறிப்பிடப்பட்ட இணக்க கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 757(2) | மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பொருள் மெய்மையாய்வு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் உரிய அறிக்கையின் பிரதியை அடுத்த வாரத்திற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 757(2) இன் பிரகாரம் பொருட்களை மெய்மையாய்வு செய்து அந்த அறிக்கையினை தாமதமின்றி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனி துணைக்கருவிகள் மென்பொருட்கள் என்பன தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | இந்த அறிக்கையை எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | திறைசேரி சுற்றறிக்கைக்கு இணங்க கணனி மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8,532,720 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 38,665,230 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 30,132,510 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இம்முன்னேற்றத்திற்கு திறைசேரி மானியம் மற்றும் ஏனைய வருமானம் ரூபா 113.5 மில்லியனால் அதிகரித்தல் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் முன்னேற்ற பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஏனைய செயற்பாட்டு செலவுகள் ரூபா 20 மில்லியனிலிருந்து ரூபா 76.5 மில்லியன் வரை அதாவது 73 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதி ரூபா 66 மில்லியனால் அதிகரித்திருந்தது.

**3.  செயற்பாட்டு மீளாய்வு**

**3.1  செயலாற்றல்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|
| (அ) 1981 இன் 54 ஆம் இலக்க தேசிய நீர் வளங்கள் மற்றும் அபிவிருத்தி முகவராண்மை அதிகாரச்சட்டம் மற்றும் 1996 இன் 32 ஆம் இலக்க திருத்திய அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான பிரேரணைகளைப் பொறுப்பேற்றலும் மதிப்பீடு செய்தலும் மற்றும் செயற்திட்டம் தொடர்பான செயல்முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அல்லது தொழில்நுட்ப விடயங்கள் சம்பந்தமாக ஆலோசனைகளைச் சமர்ப்பிப்பதற்காக முகவராண்மையால் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் குழு 2014 ஆம் ஆண்டின் போது நியமிக்கப்பட்டிருந்தும் 2019 ஏப்ரல் வரை புதிய அங்கத்தவர்களை நியமிக்காது செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது. இதன் காரணமாக<br>I. நாட்டிற்குத் தேவையான மற்றும் காலத்திற்குப் பொருத்தமான ஆராய்ச்சிகளைத் தெரிவுசெய்தல்<br>II. நலன்பெறுநர்களிடமிருந்து பிரேரணைகளைப் பெற்றுக்கொள்ளல்.<br>III. வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சி செயற்திட்டங்களின் செயலாற்றலை மதிப்பீடு செய்தல்.<br>முறைப்படியாக இடம்பெறாமையின் காரணமாக செயற்திட்டங்களின் கண்டுபிடிப்புக்களினை கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறையின் அபிவிருத்திக்கு ஆக்கபூர்வமாக ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது. | விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் குழுவினை தோற்றுவிப்பதற்காக அமைச்சிடம் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டிருந்தது. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றி நாட்குறிப்புக்குத் தேவையான செயலாற்றலை வழங்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 1981 இன் 54 ஆம் இலக்க தேசிய நீர் வளங்கள் மற்றும் அபிவிருத்தி முகவராண்மை அதிகாரச்சட்டத்தின் 34 ஆம் பிரிவின் பிரகாரம் முகவராண்மையால் | விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் குழுவினைத் தோற்றுவிப்பதற்காக அமைச்சிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. உரிய | அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br>வரையறுக்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்படுகின்ற கல்வி, ஆராய்ச்சி, பரிசோதனை செய்தல், ஏனைய புலனாய்வு, ஆய்வுகள் என்பவற்றின் கண்டுபிடிப்புக்கள் தொடர்பான தரவுகள் மற்றும் அறிக்கைகளின் விபரங்களை உள்ளடக்கிய ஒரு பதிவேடு பணிப்பாளர் நாயகத்தினால் பேணப்படாததன் காரணமாக மீண்டும் மீண்டும் அவ்வாறானவைகளை நிறைவேற்றும் ஆபத்தினை இல்லாமலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நியமனங்கள் மேற்கொள்ளப்பட்ட உடன் இக்குழுவினை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், ஆராய்ச்சிகளின் செயலாற்றலை பிரதிப் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் மதிப்பீடு, நிருவாக சபை, வரிசை அமைச்சு ஆகியோரினால் ஒவ்வொரு 03 மாதங்களுக்கு ஒரு தடவை மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டது. என்பதனைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். | வளங்களான அரசாங்கத்தின் நிதி ஏற்பாட்டினைச் செலவு செய்து ஆக்கபூர்வமாகவும் செயற்திறனாகவும் ஈடுபடுத்துவதற்குத் தேவையான அனைத்து செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்திற்காக கடல் சுற்றாடல் மீளாய்வுச் செயற்திட்டத்தை மேற்கொள்வதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 37,165,183 பணத்தில் ரூபா 2,150,000 தொகையான கொடுப்பனவு முறையான அடிப்படையின்றி செயற்திட்டத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் நிருவாக நடவடிக்கைகளுக்காக 2018 ஒக்தோபர் 04 ஆந் திகதி நேரடி மற்றும் சுழற்சி பதவியணியினருக்கு ஆலோசனை சேவை மீளாய்வுக் குழுவின் சிபார்சின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இக்குழு பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி தோற்றுவிக்கப்பட்டிருந்தது. | பகிரக்கூடிய இலாபத்திலிருந்து நிறுவனத்தின் உள்ளக அங்கீகாரத்தின் பேரில் நேரடி சேவை பங்களிப்பிற்காக (60%) ரூபா 14,321,198 பணம் செலுத்தக் கூடியதாக இருந்ததுடன் சுழற்சிப் பங்களிப்பிற்காக செலுத்தக்கூடிய பணம் ரூபா 2,386,868 ஆகும். அவற்றில் ரூபா 14,275,808 நேரடி சேவை பங்களிப்பு எனக் கருதி செலுத்தப்பட்டுள்ளது. சுழற்சி பங்களிப்பிற்காக ரூபா 2,037,651 செலுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட ரூபா 2,150,000 பணம் மேலதிகக் கொடுப்பனவாகக் காட்டப்பட்டிருந்ததுடன் அது நேரடிக் கொடுப்பனவு இன்றி நேரடி செலவுக்காகச் செலுத்தக்கூடிய பணத்திலிருந்து செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக நேரடியாகப் பங்களிப்புக்களை வழங்கிய பிரிவுகளிலுள்ள நபர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவாகும். உள்ளக சுற்றறிக்கையின் 2(F) பந்தியின் பிரகாரம் அதன் ட(II) பிரிவு இதற்கு தொடர்பு அற்றதாகும். அவ்வாறே அக்கொடுப்பனவு நிறுவனத்தின் | கொடுப்பனவு செய்யும் போது முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரினை உள்ளடக்கிய மேல்மட்ட செயற்திட்ட முகாமைத்துவ குழுவிடமிருந்து பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவாகும். குழுவினை நியமித்த கடிதம் இணைக்கப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு 05) | |
| (ஈ) | 02 வள்ளங்களைத் தயாரிப்பதற்காக அதிக சக்தியுள்ள இரண்டு வள்ளத்திற்கான இன்ஜின்களை கொள்வனவு செய்வதற்காக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 4,493,052 தொகையும் 02 வள்ளங்களைத் தயாரிக்கும் நடவடிக்கைக்காக ரூபா 2,902,938 தொகையும் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த தயாரிப்பு நடவடிக்கைகள் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தன. | கணக்காய்வு அவதானிப்பு இணங்கி கொள்ளப்படுகின்றது. | தேவைப்பாட்டினை இனங்கண்டு கொள்வனவு செய்தல் வேண்டும். இம்முறையற்ற செயற்பாட்டிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்கண்டு நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | கடற்கரைக்கு அண்மையிலுள்ள பிரதேசங்களில் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 15,685,632 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட ‘‘தரணி’’ படகு மீளாய்வாண்டின் இறுதிவரை உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2014 நவம்பர் 12 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகளுக்கான குழுக் கூட்டத்தின் போது உரிய படகை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இப்படகு நிர்மாணிக்கப்பட்ட திகதியிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை படகில் சேவையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தரின் சம்பளம், மேலதிக நேர வேலை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 9,758,290 செலவு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். 2012 ஆம் ஆண்டில் அப்போது காணப்பட்ட முகாமைத்துவத்தின் தீர்மானத்தின் பிரகாரம் இந்நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், இவ்விடயமும் பல ஆண்டுகளாக அரசாங்க கணக்காய்விற்காக உட்பட்டிருந்ததனால் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான கிரயத்தை நிறுத்துவதற்கு ரூபா 704,273.15 செலவு செய்யப்பட்டு 2018/08/28 ஆந் திகதி இப்படகு தலைமை அலுவலகத்திற்கு எடுத்து வரப்பட்டிருந்தது. | இந்த அவதானிப்பு தொடர்ச்சியாக அறிக்கையிடப்பட்டி ருந்தது. வரையறுக்கப்பட்ட வளங்களான அரசாங்கத்தின் நிதி ஏற்பாட்டை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2012 ஒக்தோபர் 04 ஆந் திகதி முகவராண்மையின் பணிப்பாளர் சபை அங்கீகரித்த 1840 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தில் குறிப்பிடப்படாத ஆலோசனை சேவை மீளாய்வுக் குழு நியமிக்கப்பட்டு அக்குழு அங்கத்தவர்களுக்கு கிழக்கு கடற்கரையில் புவிச்சரிதவியல் மீளாய்விற்கான தொடக்க சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கையினைத் தயாரிப்பதற்கான செயற்திட்டத்திடமிருந்து ரூபா 125,000 செலுத்தப்பட்டிருந்தது. இக்குழு கூடியுள்ளது என்பதற்காக தொடர்புபட்ட கூட்ட அறிக்கையோ அல்லது அக்குழுவின் கடமைப் பொறுப்புக்கள் என்ன என்பது தொடர்பான தகவல்களோ கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருக்கையில் குழு அங்கத்தவர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 125,000 இற்காக ஆகக் குறைந்தது மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள், பணிப்பாளர் சபை அங்கீகாரம் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இக்குழுவிற்கு அவர்களின் கடமைகளுக்காக செயற்திட்ட ஒருங்கிணைப்பாளரால் உத்தேசிக்கப்பட்ட கட்டணத்தின் அளவு செலுத்தப்பட்டுள்ளது. இக்குழு அங்கத்தவர்கள் இச்செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக நேரடியாக பங்களிப்பை நிறைவேற்றியுள்ளார்கள் எனவே கொடுப்பனவு செய்வதற்காக உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் தடைகள் இல்லை. இச்சுற்றறிக்கைக்கு மற்றும் மேற்கூறிய விளக்கமளித்தல்களுக்கு இணங்க நிறுவனத்தின் பிரதான நிறைவேற்றுனரின் அங்கீகாரம் போதுமானதாகும். இக்குழு பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரால் நியமிக்கப்பட்ட குழுவாகும் | கொடுப்பனவு செய்யும் போது முறையான அங்கீகாரத்துடன் செய்யப்படுதல் வேண்டும். |

**3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | உணவகத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 120,000 தொகையான அடுப்பு ரூபா 352,800 தொகையான கோப்பைகள் கழுவும் இயந்திரம் என்பன 2011 ஆம் ஆண்டிலிருந்து 2018 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டன. | இந்த இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. தற்பொழுது மேலும் திருத்தம் செய்ய முடியாதுள்ளது. | வரையறுக்கப்பட்ட வளங்களான அரசாங்கத்தின் நிதி ஏற்பாடு செயற்திறனாகவும் பயனுறுதியாகவும் செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தல் வேண்டும். பயன்படுத்த முடியாத சொத்துக்களை தொடர்ந்தும் நிலையான சொத்துக்களாக கணக்கு வைத்தல் பிரச்சினைக்குரியதாகும். அவ்வாறானவற்றை பொருள் மீளாய்வின் போது இனங்கண்டு அகற்றுவதற்கு தேவையான முறைமைகளை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2014 ஏப்ரல் மாதத்தின் போது ரூபா 76,800 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட ஒரு கணனி மென்பொருள் 2018 திசெம்பர் வரை பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | விடயத்தை பரீட்சித்த போது இது 02 ஆண்டுகள் அளவான காலம் பயன்படுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது களஞ்சியம், கொள்வனவு செய்யும் பிரிவு, கணக்குப் பிரிவு என்பவற்றை தொடர்புபடுத்தும் புதிய மென்பொருள் பயன்படுத்தப்படுகின்றது. எனவே களஞ்சியத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட மென்பொருள் தற்பொழுது பயன்படுத்தப்படுவதில்லை | இவ்வாறான அவதானிப்புக்கள் தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட வளங்களான அரசாங்கத்தின் நிதி ஏற்பாட்டினை செயற்திறனுடன் பயனுறுதியான செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்காக தேவையான முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தல் வேண்டும். |
| (இ) | 2016 திசெம்பர் 27 ஆந் திகதி சேவையிலிருந்து விலகியுள்ள விஞ்ஞானியால் பட்டப்பின் படிப்பின் பேரில் உடன்படிக்கை செய்யப்பட்ட பிணை முறிகளுக்குரிய பெறுமதியான ரூபா 727,166 பணத்தை 2016 ஆம் ஆண்டிலிருந்து அறவீடு செய்வதற்கு நிறுவனத்திற்கு முடியாதிருந்தது. | கலாநிதி தஹநாயக்க அவர்கள் தற்பொழுது பல்கலைக்கழகத்தில் சேவையாற்றி வருவதனால் அவரின் பிணைமுறிக்குரிய நிரந்தர சேவைக் காலத்தை திறந்த பல்கலைக்கழகத்தினூடாக இலங்கை அரசாங்கத்திற்கு வழங்குவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குமாறு கேட்டுக் கொண்ட வேண்டுதல் இந்த நிறுவனத்தின் 2017.02.28 ஆந் திகதி நடைபெற்ற 110 ஆவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்திலும் 2017.05.23 ஆந் திகதி நடைபெற்ற இயக்குனர் சபைக் கூட்டத்திலும் மறுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது கலாநிதி தஹநாயக்க அவர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் கோவை செய்யப்பட்டு தற்பொழுது விசாரணைகள் இடம்பெற்றுவருவதனால் அது தொடர்பான பதில் கடிதம் கிடைக்கும் வரை மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது என தேவையான நடவடிக்கைகளுக்காக அறிவிக்கின்றேன். | பிணைமுறியின் பெறுமதியை பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதல் வேண்டும். |

**3.4 ஏனைய அமைப்புக்களின் வளங்களைப் பயன்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) முகவராண்மையின் கல்பிட்டி ஆராய்ச்சி நிலையம், கப்பரதொட நாரா பிராந்திய நிலையம் மற்றும் ரெகவ பிராந்திய நிலையம் அமைந்துள்ள ரூபா 53,400,900 மொத்த தொகையான காணிகள் முகவராண்மைக்கு ஒப்படைக்கப் பட்டிருக்கவில்லை. | கல்பிட்டி பிராந்திய ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள காணியை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. கப்பரத பிராந்திய ஆராய்ச்சி நிலையம்.<br><br>காணியை ஒப்படைக்கும் சான்றிதழ் வெலிகம பிரதேச செயலாளரால் பதிவு செய்வதற்காக 2019/04/29 ஆந் திகதி மாத்தறை காணிப் பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.<br><br>ரெகவ பிராந்திய ஆராய்ச்சி நிலையம்.<br><br>இந்நிலையத்தை ஒப்படைக்கும் போது மாவட்ட காணிப் பயன்பாட்டுக் குழு நீண்டகால குத்தகையின் அடிப்படையில் ஒப்படைப்பதற்கு இணங்கியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. | முகவராண்மையால் அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளை விரைவாகப் பொறுப்பேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) தேசிய நீர் வாழ் பயிர் அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பனாபிடிய பிராந்திய அலுவலகம் அமைந்துள்ள காணியின் உரிமையை முகவராண்மைக்குப் பொறுப்பேற்காது முன்னைய ஆண்டின்போது ரூபா 552,906 செலவு செய்து நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது அக்காணி பொறுப்பேற்கப்பட்டிருக்கவில் லை. முகவராண்மைக்கு முறைப்படியாக ஒப்படைக்கப்படாத காணியில் முகவராண்மையின் குறிக்கோள்களுக்குப் புறம்பாக ரூபா 15,245,000 தொகை 2014 ஆம் ஆண்டின் போது செலவு செய்து பேருவளை மீன் | ''மீளாய்வாண்டின் போதும் இக்காணியைப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.'' என்பதுடன் இணங்கவில்லை. 2013/05/30 ஆந் திகதி நாரா நிறுவனமானது தேசிய நீர் வாழ் பயிர் அபிவிருத்தி அதிகார சபையுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதானது 15 ஆண்டுகளுக்கு இந்நிறுவனத்திற்கு உத்தேச ஆதனத்தை ஒப்படைப்பதற்காகும். அந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் இயலுமை காணப்படுவதனால் அதற்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் இடம்பெற்றுள்ளது. எவ்வாறாயினும், 2016/10/18 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் மூலம் அந்த ஆதனத்தை நிரந்தரமாக இந்த நிறுவனத்திற்கு ஒப்படைப்பதற்கு | முகவராண்மையின் குறிக்கோள்களை இனங்கண்டு அதனை அடைந்து கொள்வதற்காக தேவையான நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நிர்மாணிப்பதற்கு முன்னர் காணியின் உரிமையை முகவராண்மைக்கு ஒப்படைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விற்பனை நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | வரிசை அமைச்சிற்கு அனைத்து தகவல்களுடன் உரிய வேண்டுதல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>அது தொடர்பான பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக ஏனைய நிறுவனங்களின் மூலம் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதிலான தாமதமும் இதற்காக தாக்கம் ஏற்படுத்தியுள்ளது. (உதாரணம்:- மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கை தாமதித்தமை) | |
| (இ) | மூன்று உத்தியோகத்தர்கள் வரிசை அமைச்சிற்கும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கும் விடுவிக்கப்பட்டு முகவராண்மையால் மீளாய்வாண்டின் போது சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 400,542 செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். எவ்வாறாயினும், வரிசை அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் பேரில் அந்த அமைச்சிற்கு இம்மூன்று உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டிருந்தும் பல ஆண்டுகளாக இது அரசாங்க கணக்காய்விற்கு உட்பட்டதன் அடிப்படையில் விடுவித்தல் காலம் நீடிக்கப்படாது அவர்கள் பிரதான அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டுள்ளார்கள். | 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு நேரடியாகச் சம்பந்தப்பட்ட 29 பதவிகளில் 116 வெற்றிடங்களும் 27 உதவியளித்தல் சேவைப் பதவிகளில் 51 வெற்றிடங்களும் காணப்பட்டன. இப்பதவிகளில் வெற்றிடங்கள் தொடர்ச்சியாகக் காணப்படுகின்றமை முகவராண்மையின் பிரதான குறிக்கோள்களை நிறைவேற்றுவது தொடர்பாக பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | நாரா நிறுவனத்தின் வெற்றிடங்களுக்காக முகாமைத்துவ சேவைக் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒட்டுமொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 503 ஆக இருந்ததுடன் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 167 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. இந்த 503 ஆளணியினருக்குள் புதிதாக ஆரம்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள திருகோணமலை, பூநகரி, மட்டக்களப்பு ஆகிய புதிய பிராந்திய ஆராய்ச்சி நிலையங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. | முகவராண்மையில் காணப்படுகின்ற ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பதவிக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகள் எதனையும் பூர்த்தி செய்யாத ஒரு உத்தியோகத்தர் நிதிப் பணிப்பார் பதவிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார். | பணிப்பாளர் நிதிப் பதவியில் சேவையில் ஈடுபட்டுள்ள ஹேவாகம அவர்களின் தகைமைகளில் மாற்றம் சம்பந்தமாக நாரா இயக்குனர் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் 2018 நவம்பர் 29 ஆந் திகதி நடைபெற்ற 08 ஆவது நாரா இயக்குனர் சபைக் கூட்டத்தில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.<br>அதற்கிணங்க, என்.எஸ் ஹேவாகமகே அவர்கள் பணிப்பாளர் / நிதி பதவிக்குரிய தகமைகள் சம்பந்தமாக இயக்குனர் சபையின் ஆலோசனையின் பிரகாரம் அனைத்து விடயங்களுடன் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சிபார்சுகளைப் பெற்றுக்கொள்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விடயத்தைத் கருத்தில்கொண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2019 மார்ச் 30 ஆந் திகதி பதிலை அனுப்பி தெரிவித்திருந்தானது 2013 ஏப்ரல் 12 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ள நாரா ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் தகமையாக இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் நிறுவனம் சார் அங்கத்துவத்தினை பெற்றுக்கொள்ளுதல் எனக் காட்டப்பட்டிருந்ததுடன் ஆனால் ஹோவாகம அவர்களின் தகமையாகிய இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் அரசாங்க துறையில் அங்கத்துவம் அப்பதவியின் தகமையாக அங்கீகரிக்கப் பட்டிருக்கவில்லை என்பது தெரிவிக்கப்பட்டிருந்தது. | ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் போது ஒவ்வொரு பதவிக்கும் தேவையான தகமைகள் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் சேர்த்துக் கொள்வதற்கு தேவையான முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், முகவராண்மையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 60 நாட்கள் தாமதத்துடன் அதாவது 2019 ஏப்ரல் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | நாட்டில் நிலவிய சிறப்பற்ற சூழ்நிலையின் அடிப்படையில் இது 60 நாட்கள் வரை தாமதித்துள்ளது. அவ்வாறே நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது முகாமைத்துவ கடிதத்தை சமர்ப்பிக்க முடியாமையும் இதற்காக தாக்கமளித்திருந்தது. | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையைப் பின்பற்றி உரிய திகதியில் நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்கு வழங்குவதற்கு தேவையான முறைமைகளையும் கட்டுப்பாடுகளையும் தயாரித்தல் வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மீளாய்வாண்டின் போது 23 கணக்காய்வு ஐயவினாக்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு ஐய வினாக்களில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தால் நிவர்த்தி செய்யும் நடைமுறைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை தலைவருக்கு சமர்ப்பித்ததன் பின்னர் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. பணிப்பாளர் நாயகத்தினால் அதற்காக சரியான நடைமுறைகளை எடுப்பதற்காக உரிய பிரிவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அப்பிரிவுகளில் எடுக்கப்பட்ட நடைமுறைகள் தொடர்பாக பணிப்பாளருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | நிறுவனத்தின் சரியான தகவல்களை உயர் முகாமைத்துவம் பெற்றுக்கொண்டு முகவராண்மையிடமிருந்து அரசாங்கம் எதிர்பார்க்கின்ற குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு தேவையான முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை வலுப்படுத்துதல் வேண்டும். |

## 4.3 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் முகவராண்மையால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 03 தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டன. | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் செயற்பாடுகள் உள்ளகக் கணக்காய்வாளர், கணக்காய்வு உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர், சேவை உதவியாளர் ஆகிய பதவிகளை வகிப்பவர்களை உள்ளடக்கிய நான்கு நபர்களைக் கொண்ட பதவியணியினரால் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கிணங்க போதியளவான பதவியணியினர் இல்லாதிருந்தும் இக்காலப்பகுதியின் போது திட்டமிடப்பட்டவாறு கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் இறுதிக் காலாண்டின் போது நடத்துவதற்கு இருந்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் நடாத்த முடியாதிருந்தது. | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்தி நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அதனை வலுப்படுத்த வேண்டும். |

## 4.4 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ''நிகழ்ச்சி நிரலின்' பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக தேசிய நீர் வளங்கல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையால் தமது நோக்கெல்லைக்கு உட்பட்ட செயற்பாடுகள் சம்பந்தமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. என அது தொடர்பான கேள்விக் கொத்தில் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், முகவராண்மையால் அச்செயற்பாடுகள் சம்பந்தமாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நோக்கி அடைய வேண்டிய நிலைகளும் இலக்குகளின் அடிப்படையில் அடைவதனை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாக அமைச்சின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க இலக்குகளும் குறிகாட்டிகளும் காட்டப்பட்டுள்ளன. மேலும் திருத்தம் செய்யப்பட வேண்டுமாக இருந்ததால் எதிர்காலத்தில் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அனைத்து அரசாங்க நிறுவனங்களும் 2030 ஆம் ஆண்டில் நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி அடைய வேண்டியுள்ளது. அதற்குத் தேவையான செயற்பாடுகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |